
# Word Of Christ

# கிறிஸ்துவின் வசனம்





ஆசிரியர்

B. அர்ச்சுனன்

★ *ஆசிரியர் கடிதம்*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பத்திரிக்கையை தொடர்ந்து பெற்று வருவீர்களென்று நம்புகிறோம். வரும் ஆகஸ்டு '97 முதல் இன்னும் அநேகருக்கு நமது மாத இதழை அனுப்பி கிறிஸ்துவின் வசனத்தைத் தெரிவிக்க வாஞ்சிக்கிறோம் ஆகையால். உங்களது நண்பர் மற்றும் உறவினர்களுடைய முகவரியை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி எங்களுக்கு அனுப்பினால் அவர்களுக்கும் இவ்விதழை இலவசமாக அனுப்பிவைப்போம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

ஆசிரியர்

கிறிஸ்துவின் பணியில் B. அர்ச்சுனன்

---

★ *சபைச் செய்தி*

மே 15-ம் தேதி சகோதரிகளுக்கான கூட்டம் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் நடைபெற்றது. சிலர் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

★ *மே மாத இதழின்வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்*

| | |
|---|---|
| 1. N. டேனியல் தமிழ்வாணன் | மேல்விசாரம் |
| 2. R. பெருமாள் | புதுபாளையம் |
| 3. S. ரேய்ச்சல் அமுதமணி | மேல்விசாரம் |
| 4. J. மேரிஎலிசபெத் கலைவாணி | வத்தலக்குண்டு |
| 5. S. எஸ்தர் ராணி | தூத்துக்குடி |

★ *மே மாத இதழின் விடைகள்*

| | |
|---|---|
| 1. தாவீது I சாமு 24:13 | 6. தமது வசனத்தை |
| 2. எப்பிராயீம் காட்டில் II சாமு 18:8 | 7. ஆமணக்கு |
| 3. 12 பேர் I இராஜா 4:7 | 8. அடிமைப்பட்டவர்களாக |
| 4. நியாயப்பிரமாணத்தின் ரோம 10:4 | 9. அகியா |
| 5. மரணத்திலே I யோ 3:14 | 10. ஏழு |

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 5 ஜூன் 1997 கனி 11


## தேவன் சத்தியமுள்ளவர்

### God Is True

சர்வத்தையும் படைத்தவர் சத்தியமுள்ளவர். அவர் இன்றும் ஜீவிக்கிறவர், அவர் வல்லமை நிறைந்தவர், அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும் பிரிய நண்பரே! அவரைக் குறித்து பரி. சுத்த வேதாகமத்தில் யோவா 8:26 ல் சத்தியமுள்ளவர் என்று வாசிக்கிறோம். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின இந்த சத்தியமுள்ளதேவன் சத்தியபரராகிய இயேசுவை அனுப்பினார். அவரிடத்தில் கேட்டவைகளையே நமக்கு சத்தியமாக சொல்லியிருக்கிறார் அவைகளை நாம் பரிசுத்தவேதாகமத்தில் பார்க்க முடிகிறது.

சத்தியமுள்ளவர் என்றால் உண்மை நிறைந்தவர் என்று பொருள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் அவ்விதமே இருக்கிறார் தேவன் பொல்லாங்கை வெறுக்கிறார். அவரிடத்தில் எவ்வளவேனும் இருள் இல்லை. அவர் ஒளியாயிருக்கிறார் இப்படிப்பட்ட தேவனை உங்கள் சொந்த வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டுள்ளீர்களா? அவருடைய போதனையை வாசித்திருக்கிறீர்களா? ஒருவேளை நான் பரம்பரை கிறிஸ்தவன் என்று நீங்கள் சொல்லலாம் அல்லது நான் எல்லா மதக்கோட்பாடுகளையும் கடைப்பிடிக்கிறவன், ஒரு அநீதியும் செய்யாதவன் என்று சொல்லலாம். எது எப்படியிருந்தாலும் சத்தியமுள்ளவர் உங்களை விடுதலை செய்ய வேண்டும் சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று யோவா 8:32 ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுவதை சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

நீங்கள் அவரை அறிய வேண்டும், அவர் சொல்லிய வார்த்தைகளை அறிய வேண்டும். அவர் அனுப்பினவரை அறியவேண்டும். இப்படி அநேக விஷயங்களில் அவரைக் குறித்து நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் அப்பொழுது தான் சத்தியமுள்ள தேவன் அவர் வைத்துள்ள திட்டத்தின்படி உங்களை விடுதலை செய்வார். மற்றபடி உங்கள் நம்பிக்கை விருதா.

மாணவர்கள் கணக்குப் பரிட்சை எழுதுகிறார்கள் கணக்கைச் சரியாக செய்திருந்தால் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். சரியாக செய்யாமல், நான்கணக்குப் பரீட்சை அட்டன்ட்பண்ணியிருக்கிறேன்

வெற்றி பெறுவேன் என்று சொல்லிக் கொண்டிருந்தால் ரிசல்ட் வெளிவரும் போதுதான் தெரியும் வெற்றியா, தோல்வியா என்று. பிரியநண்பரே! உலகப்பிரகாரமான பரீட்சையையே சரியாக செய்யாவிட்டால் தோல்வியை தழுவும் போது, ஆவிக்குரிய பரீட்சையில் நாமெப்படி நடக்க வேண்டும் நம்மைபரீட்சிக்கிறவர் அக்கினியாயிருக்கிறார். அவர் மனுஷனிடத்தில் பணிவிடைகளை ஏற்றுக் கொள்ளாதவர். அவர் இருப்பதைப்போல நாமும் சத்தியமுள்ள வேத வசனத்தின்படி ஜீவித்தால் நாம் ஆவிக்குரிய பரீட்சையில் வெற்றி பெறுவோம். பாதாளத்தையும் மேற்கொள்வோம்.

இன்றையநாட்களில் அநேகர் 50./· மட்டும் சத்தியத்தைக் கைக் கொண்டு நடந்தால் போதுமானது என்று கருதுகின்றனர் 1யோவா 2:6ல் அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. உதாரணமாக ஒருவர் ஒரு கயிற்றின் மீது உதவிகோல் இல்லாமல் நடந்து 30 அடி சென்றார் என்றால் அவரைப்போல் நடக்க விரும்புகிறவன் அவர் எப்படி கயிற்றின் மீது நடந்து 30 அடியை கடந்தாரோ அப்படியே தானும் நடக்க வேண்டும். அப்படியல்ல நான் ஒரு உதவி கோல் வைத்துக்கொண்டு நடந்து 30 அடியை கடப்பேன் என்றால் அது முழுவதும் அவர் நடந்தபடி நடத்ததாக அர்த்தமல்ல. அது வெறும் 50./· மட்டுமே என்றுபார்க்கிறோம் பிரிய நண்பரே! இப்பாடத்திலிருந்து என்ன தெரிந்து கொள்கிறோம்? இயேசுவைப் பின்பற்றுகிற நாம் அடிபிறழாமல் அவர் நடந்தபடியே நாமும் நடக்க வேண்டும் அப்பொழுது சத்தியமுள்ளவரோடு ஐக்கியப்பட்டு இருப்போம்.

வேதவசனம் சொல்கிறபடி அநேகர் இன்று ஜீவிப்பது இல்லை. வாழ்க்கையில் உண்மையில்லை. பேச்சில் சுத்தமில்லை நடத்தையில் முறைகேடு இப்படி அநேகபாவங்களுக்கு உட்பட்டு ஜீவிக்கிறார்கள் நாம் நம்முடைய ஜீவியத்தில் பரிசுத்தமாக இருந்தால் பரிசுத்தரோடு சேர்க்கப்படுவோம். இல்லையென்றால் தேவ கோபத்திற்கு உட்படுவோம்.

பிரிய நண்பரே! பரலோகத்தில் வாசம் பண்ணுகிறவர் சொல்கிறார் வெளி 21:5-8 ல் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர் இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர். இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார் அன்றியும் அவர் என்னை நோக்கி: ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன். அவன் என்

குமாரனாயிருப்பான். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும் கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும் பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார். நாம் இந்த சத்தியமுள்ளவரை ஏற்று அவர் வழி சென்று அவர்கொடுக்கும் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்வோம்

## யோசேப்பு ஒரு அருமையான மனிதன்

### Joseph is a good man

மனித வரலாற்றிலே யோசேப்பின் கதை மிக அருமையானது. வேதாகமத்து மூதாதையர்களில் யோசேப்பும் ஒருவன், வாலிபப்பிராயத்திலேயே பல விதமான சோதனைகளை சந்தித்தவன். அதுவும் வீண்பழி சுமத்தப்பட்டு மற்றோர் பொறாமைக்கு பலியான ஒரு வாலிபன். அவர்கள் சந்ததியின் மூலமாக எல்லா ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று ஆபிரகாம், ஈசாக்கு, யோசேப்பு மூலமாய் தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் நிறை வேறுதலுக்கு தானும் ஒரு கருவியாக பயன்படப்போவது இந்தயோசேப்புக்கு தெரியாது. இவன் தன் ஜீவியத்தில் மேன்மையாக வருவதற்கு எந்தவித தடயங்களும் காணப்படாவிட்டாலும், ஒரு உயர்ந்த ஸ்தானத்திற்கு உயர்த்தப் படுகிறான்.

அவன் ஜீவியத்தில் ஒன்றன்பின் ஒன்றாக சில சோகக்காட்சிகள் இடம் பெறுகின்றன. யாக்கோபுக்கு, ராகேல் மூலமாக, அவன் முதிர் வயதில்பிறந்தவன். ராகேலின்செல்லப்பிள்ளை, யாக்கோபின் மறுமனையாட்டிகளின் குமாரரோடே அதாவது தன் சகோதரர்களோடே யோசேப்பு இருந்துஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது அவனுக்கு 17 வயது. அவர்களுடைய துன்மார்க்கத்தை தன் தகப்பனுக்கு சொல்லிவருவான். அவன் சகோதரர்களுக்கு இது பிடிக்காமலிருந்து தகப்பனும், தன்குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து, அவனுக்கு பலவருண அங்கியைச் செய்வித்தான். இதினிமித்தம் யோசேப்பை அவன்சகோதரர் பகைத்தனர். யோசேப்பு ஒருசொப்பனங் கண்டு, அதை தன் சகோதரருக்கு அறிவித்தான். அதன் அர்த்தத்தை உணர்ந்து, அவர்கள் "நீ எங்களை ஆளப்போகிறாயா"? என்று சொல்லி, யோசேப்பை பகைத்தனர். வேறொரு சொப்பனத்தை விவரிக்க, அதைக்கேட்ட அவன் தகப்பன், இந்தச்சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும் உன் சகோதரரும் தரைமட்டும்குனிந்து உன்னை வணங்க வருவோமா? என்று அவனைக்கடிந்து கொண்டான். அவன் சகோதரர் அவன் மேல் பொறாமை கொண்டார்கள்.

பொறாமை ஒரு நெருப்பை போன்றது. அது மற்றவரை அழிக்கு முன் அது உள்ளவனும் அழிந்து போவான். பொறாமைக்கு முன்பாக யார் தான் நிற்பார்கள்? தன்னிடத்தில் இல்லாத மேன்மை சிறப்பு மற்றவர்களிடத்தில் காணும்போது, ஒருவனுக்குள் ஏற்படும் வயிற்றெரிச்சல் தான் இந்த பொறாமை. பொறாமை உள்ளம் கொண்ட இந்த சகோதரர்கள் யோசேப்பை தீர்த்துவிட எண்ணினர். ஆனால் தேவனோ யோசேப்பைதன் திட்டத்தில் எப்படி உபயோகப்படுத்தினார் என்பதே இந்த கதையின் சாராம்சம். மனிதனுடைய திட்டம் வேறு, தேவனுடைய திட்டம் வேறு. மனிதன் தேவனோடு போட்டி போட இயலுமா? அல்லது தேவ நோக்கத்தை அழித்து விடத்தான் முடியுமா?

யோசேப்பு ஒரு நாள் சீகேமிலே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் அவன் சகோதரர்களைப்பார்த்து அவர்கள் நலம் விசாரித்துவிட்டு வாதகப்பனால் அனுப்பப்பட்டான். சென்று தேடி அவர்களை தோத்தானிலே கண்டு பிடித்தான். தூரத்தில் அவன் வருவதைக் கண்ட போது: அவன் சகோதரர்கள் அவனைக் கொலை செய்யும்படி யோசனை பண்ணினார்கள். இதில் ரூபன் தலையிட்டு அவனை கொல்லாமல் வனாந்தரத்திலுள்ள குழியில் போட்டு விடுங்கள் என்று யோசனை சொன்னான். அப்படியே எல்லாரும் சேர்ந்து யோசேப்பின் பலவருண அங்கியை கழற்றிவிட்டு, அவனை தண்ணீரில்லாத வெறுங்குழியில் போட்டார்கள் இன்னொரு சகோதரன் யூதா யோசேப்பை, அந்தவழியாக வந்த இஸ்மவேலின் வியாபாரிகளுக்கு விற்று போடும்படி யோசனைகூற அதன்படி எல்லாரும் செய்தனர் அவர்கள் யோசேப்பை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டனர்.

பிறகு அவனுடைய பலவருண அங்கியை எடுத்து, ஒரு வெள்ளாட்டு கடாவை அடித்து, அந்த அங்கியை இரத்தத்தில் தோய்த்து, தகப்பனிடத்தில் கொண்டு வந்து, துஷ்டமிருகம் யோசேப்பை அடித்துப் போட்டது என்று பொய் சொல்லி, ஒரு நாடகமே நடத்து விட்டார்கள் யோசேப்பு செத்து விட்டதாக உண்மையென நம்பி, யாக்கோபு அநேக நாள் தன் குமாரனுக்காக துக்கித்துக் கொண்டிருந்தான். உண்மையிலே யோசேப்பு இறந்து போயிருந்தாலும், இதற்கு அதிகமாகவா துக்கம் கொண்டாடியிருக்கப் போகிறான்! ஒரு சமயம் ஒரு மனைவிதன் புருஷனைப்பார்த்து "பாருங்கள், உங்களுக்கு நான் ஒருபோதும் துரோகம் செய்வதில்லை செய்யவும் மாட்டேன் என்றாளாம்" அவளுடைய தவறான போக்கை கண்டித்தும் திருந்தாததைக்கண்டு, வருத்த முற்றிருக்கும் அவள் கணவன் சொன்னானாம் "என் அருமை பத்தினியே உண்மையிலே நீஎனக்கு துரோகம்பண்ணி இருந்தாலும் இப்பொழுது

அனுபவித்துக் கொண்டிருக்கும் சித்திர வதைக்கு ஈடாகவே நான் அப்பொழுது அனுபவிப்பேன்'' என்றும் தவறான செயலைப் போலவே தவறான போக்கும் கண்டிக்கப்படத்தக்கதே.

எப்படியோ யோசேப்பைப்பற்றி தாங்கள் கூறிய பொய்யை தங்கள் தகப்பன் நம்பும்படி செய்து, தங்கள் சகோதரனை வஞ்சம் தீர்த்துக் கொண்டனர். அந்த அளவுக்கு யோசேப்பு தீயவனு இல்லை இவர்கள் அவனைப்பற்றி கொண்டிருந்த எண்ணம், கற்பனைதான் காரணம் இதற்குகாலமும், அதுதரும் வேதனையும் தான் அவர்களுக்கு பதில் சொல்லும்.

இஸ்மவேலர்கள் யோசேப்பை வாங்கிக்கொண்டு போய் எகிப்து நாட்டில், ராஜாவின் பிரதானியும், தலையாரிகளுக்கு அதிபதியுமான போர்த்திபார், என்பவனிடத்தில் விற்றார்கள். ஒரு வீட்டில் அடிமை பரிதாபமான நிலை நம் யோசேப்புக்கு. அனேகரைப்போல, தனக்கு நேரிட்ட துர்பாகியமான நிலையை குறித்து நினைத்து, அழுது, தன்னை நொந்து கொள்ளவில்லை. யோசேப்பு, அடிமையாக அந்த வீட்டில் இருந்தாலும் கண்ணியம் தவறாமல் நடந்து ஒரு கடமை வீரன் என்று பெயர் வாங்கி போர்த்திபாரின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றான். இங்கும் ஒருசோதனை வந்தது: போர்த்திபார் மனைவிக்கு அவன் மீது ஒரு கண் விழுந்தது அவள் சாகசச்செயலுக்கு இணங்காமல் தன்வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியேஓடிப்போனான். யோசேப்பு, நவீன வாலிபர்களைபோலில்லை ''சந்தர்ப்பமும், சூழ் நிலையும் அப்படிச்செய்தன. நானோஇளைஞன் என்ன செய்வது. அவ்வளவு பெரியஇக்கட்டான சோதனையிலிருந்து தப்பமுடியவில்லை'' என்று எல்லாம் கூறி அந்த சோதனைக்கு தன்னை ஒப்புக்கொடுக்கவில்லை.

யோசேப்பு. போர்த்திபாரின் மனைவியைப்பார்த்து சொன்ன வார்த்தைகளை கேளுங்கள் ,, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்றான்? எப்படிப்பட்டமனோநிலையுடையவனாக யோசேப்பு இருந்திருக்கிறான் பாருங்கள். நமக்கு எப்பேர்ப்பட்ட சோதனை வந்தாலும் யாருக்கு எதிராக அந்த காரியம் செயல்பட்டாலும், அது தேவனுக்கு விரோதமான பாவம் என்ற உணர்வு மாத்திரம் இருந்தால், இன்றைய வாலிபர் உலகம் சீர்கேடான தங்கள் பாதையிலிருந்து காப்பாற்றப்படலாம். வலியச் சண்டைக்குப் போகக்கூடாது. ஆனல் வந்த சண்டையை விடக்கூடாது என்ற பழமொழி இங்கு செல்லுபடியகாது. பிசாசானவன் நாம் நேர்மையான பாதையைவிட்டு இடறிவிழ, அனேக சோதனைகளையை போடுவான் சோதனைக்கு இடம் கொடுப்பது சுலபம். ஆனால் சோதனையை எதிர்த்து நிற்பது அவ்வளவு சாமான்யமான காரியம் அல்ல. அதற்கு

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக அவசியம். எல்லாவற்றுக்கும் மேலாக தேவபயம் நமக்கு இருக்கவேண்டும்.

யோசேப்பு இந்த பெரிய சோதனையையும் கூட சமாளித்து விடக்கூடிய அளவுக்கு, நெஞ்சில் துணிவும், நேர்மையும் இருந்தது. போர்த்திபார் மனைவியும் அவனை விடவில்லை. தன் மோக இச்சைக்கு ஒப்புக்கொடாத அவனை பழி வாங்க, பொய் குற்றச்சாட்டுக்களை அவன் மீது போட்டு, சிறைச்சாலைக்கு அனுப்புகிறாள்.

யோசேப்பு சிறைச்சாலையிலும் கூட, தன் விதியை எண்ணி தன்னையே நொந்து கொண்டு, தன் கசப்பை யார் மீதாவது போட்டு, தன் அங்கலாய்ப்பை தீர்த்துக்கொள்ள எண்ணாமல், வருவது வரட்டும், நான் என் நேர்மையான பாதையை விட்டு விலக மாட்டேன் என்று உறுதி கொண்டவனாக அங்கும் தன் உயர்ந்த குணத்தை வெளிப்படுத்தினான். இப்படிப் பட்டவர்களை தேவன் ஒரு நாளும் கைவிட மாட்டார். சோதனைகள் யாவருக்கும், வாலிபர், வயோதிபர் அனைவருக்கும் வரும், சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என்று வேதம்கூறுகிறது. இந்த சோதனை கட்டங்களே யோசேப்புக்கு ஒரு பரீட்சையாக அமைந்து, தன் உத்தமத்தை உறுதி படுத்த உதவியாயிருந்தது. போர்த்திபார் கூட தன் மனைவியைக் காட்டிலும் யோசேப்பின் மீது மிகுந்த நம்பிக்கையை வைத்திருக்கக் கூடும் அதனால் தான் அப்படிப்பட்ட பெரிய குற்றம் சாட்டப்பட்டவனை கொல்லாமல், சிறையில் தள்ளிவிடுகிறான்.

இப்படியாக யோசேப்பு சென்ற இடமெல்லாம், மற்றவர்களுடைய நம்பிக்கைக்கு பாத்திரவானாக நடந்து கொண்டிருக்கிறான். ஆகவேதான் மற்றவர் அன்பையும், நன்மதிப்பையும் பெற்று வந்திருக்கிறான். தேவனுடைய ஒத்தாசையையும் பெற்றான். அதற்கு பாத்திரவானாக விளங்கி இருக்கிறான்,

அன்புள்ள நண்பனே, நீயும் தேவ ஒத்தாசை பெற்று சோதனைகளின் மத்தியிலும், ஒரு வெற்றியுள்ள ஜீவியத்தை காண வாஞ்சித்தால், உன்னை தேவனுக்கு ஒப்புக்கொடு. எல்லா சோதனைகளையும் தாங்கி, நமக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து நம் வெற்றிக்கு ஒரு மாதிரியாக இருக்கிறார் தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்து. அவரை ஏற்றுக்கொள். தேவன் உங்களோடிருப்பாராக.

P.R. SWAMY

Bangalore

## பிசாசின்பிடியிலிருந்து குணமாக்கப்பட்ட நன்றியுள்ள மரியாள்

## Mary, the Grateful Demoniac

இயேசு இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களில் ஒரு நகரத்திலிருந்தும், கிராமத்திலிருந்தும் மற்ற நகரத்திற்கும் கிராமத்திற்கும் சென்று மக்களிடையே பல அற்புதங்களை செய்து வந்தார். அப்பொழுது மக்தலா என்ற ஊரில் வாழ்ந்து வந்த, ஏழு பிசாசுகள் பிடித்திருந்த மரியாளிடமிருந்து பிசாசுகளை துரத்தி விடுவித்தது இந்த அற்புதங்களில் ஒன்றாக வேதம் கூறுகிறது மாற் 16:10. உண்மையாகவே இவள் தன் இருதயத்தின் ஆழத்திலிருந்து, உமக்கு நன்றி ஆண்டவரே' என்று கூறியிருப்பாள். அவள் எவ்விதமாய் தன் நன்றியை தெரிவித்தாள் என்பது நமக்கு ஒரு அற்புதமான பாடமாயிருக்கிறது.

நன்றி செலுத்துவது என்பது இருதயத்தின் நீங்கா நினைவு என்று சிலர் வர்ணிக்கின்றனர். கர்த்தருக்கு தன் நன்றியுணர்வை காண்பிக்க மரியாள் விரும்பினாள் அவள் இயேசுவோடு கூட அவர் அருகிலிருந்து கொண்டு, அவரது ஊழியம் முழுவதிலும் அவருக்கு உதவியாக இருப்பதைக் காட்டிலும் மேலான காரியம் ஒன்றுமில்லை என்று அறிந்து கொண்டாள். தன்னை விடுவித்து சுகப்படுத்தியதை அவள் மறக்கவில்லை. இது அவள் இயேசு மேல் கொண்டிருந்த அவளது அன்பை அல்லவா காண்பிக்கிறது!.

எங்கெல்லாம் அவர்கள் சென்றார்களோ அங்கெல்லாம் மரியாளும், பொல்லாத ஆவிகளின் பிடியிலிருந்தும், வியாதிகளின் பிடியிலிருந்து நீங்கி குணமாக்கப்பட்ட சில ஸ்திரிகளும் இயேசுவோடும், அவருக்கு உதவியாக தெரிந்து கொள்ளப்பட்ட 12 சீஷர்களோடும் சென்று ஊழியம் செய்து கொண்டு வந்தனர். இந்த நெருக்கமான பிணைபுள்ள இந்த ஸ்திரிகள், அவர்களது ஊழியத்தேவைகள் சந்திக்கப்படும்படி தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து கொண்டு வந்தனர் லூக் 8:2-3.

இந்த ஸ்திரியைப்பற்றி சிறிது அறிந்து கொள்வோம். எபிரேய பாஷையில் இவளது பெயர் மிரியாம். யூதஸ்திரிகளுக்குள்ளே இவள் ஒரு சாதாரண பெண்மணி புதிய ஏற்பாட்டில் 51 இடங்களில் இவளைப்பற்றி சொல்லப்படுகிறது. அவைகளில் 14 முறை மக்தலேனா மரியாள் என குறிப்பிட பட்டுள்ளது இச்சம்பவமானது எட்டு தலைப்புகளில் இடம்பெற்றும் ஐந்து இடங்களில் இவளைக்குறித்து தனிப்பட்ட விதத்திலும், ஒரே ஒரு முறை இயேசுவின் தாயாகிய மரியாளைப் பற்றியும் சொல்லப்பட்டடுள்ள.

மரியாளை
மற்ற மரியாள்களிடமிருந்து இந்த மகதலேனா மரியாளை
அடையாளம் கண்டுகொள்ள மரியாள் என்ற இவளது பெயருடன்
மகதலேனாள் என்ற பதம் பின் தொடர்வதைக் காணலாம். இவள்
மகதலா என்ற கிராமத்தைச் சேர்ந்தவளாயிருப்பாதால் மகதலேனா
மரியாள் என வேதம் நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

இயேசுவுக்கு ஊழியம் செய்த அநேகம் ஸ்தீரிகளில்
இந்த மரியாள் மிகுந்த உற்சாகமுடையவளாகவும் தீவிரமுடையவளா
கவும் காணப்பட்டாள் இயேசு அவளுக்குச் செய்த நன்மைகளினி
மித்தம் அவள் இயேசுவின் மேல் கொண்டிருந்த அவளது அன்பும்
தாராளமாக கொடுக்கும் மனப்பான்மையும் அவள் மிகுந்த நன்றியுள்
ளவளாய் இருக்கிறாள் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது
மனச்சோர்வில்லாதவளாய், மிகுந்த பக்திவைராக்கியத்துடனும்
ஆர்வத்துடன் உதவிசெய்து, உற்சாகத்துடனுன் இயேசுவைப்பின்
பற்றிக் கொண்டு அவருக்கு ஊழியம் செய்து வந்தாள்.

இயேசு அவளுக்குச் செய்த நன்மைகளுக்காய் மகதலேனா
மரியாள் அவரிடம் அன்பும், விசுவாசமும் கொண்டவளாய் விளங்கினா
ள். இயேசுவின் மேல் கொண்டுள்ள அவளது ஆழமான அன்பு
அவளை அவரது சிலுவை பரியந்தமும், ஏன்! அவரை கல்லறையிலே
வைத்த தருணம் வரைக்குமே அழைத்துசென்றது மாற் 15:46,47,
இவ்விதமாய் முடிவுபரியந்தமும் இயேசுவை தொடர்ந்து பற்றிக்
கொண்ட இவளது அன்பு வலியது. இதுமட்டுமல்ல, காலையிலே
அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு
அதுவும் தனியே வந்தது இவளது அன்பின் ஆழத்தை ஊர்ஜிதப்படுத்து
கிறதாயிருக்கிறது-யோவா 20:1. கடைசிகட்டம்வரை இருந்தவளும்
இவளே! கல்லறைக்கு முதன்முதலாகச் சென்றவளும் இவளே!
இயேசு உயிர்த்தெழுந்தபின் அவரை சந்தித்த முதல் ஸ்திரியும்
இவளே! இத்தனை செயலும் இயேசுவின் மேல் இவள் கொண்டிருந்த
இவளது அன்பின் ஆழம் பெரியது என்பதையே நிரூபிக்கிறது.

இந்த மரியாள் இவ்வளவு பணிவுள்ள ஸ்திரியாக
இருந்த போதிலும், எருசலேமில் இவளுடைய நாமம் தரிக்கப்பட்ட
அழகான கட்டிடம் ஒன்று இருக்கிறது. இந்த ஆலயம் அந்த நகரத்தின்
எந்த இடத்திலிருந்து பார்த்தாலும் தெளிவாக தெரியகூடிய உயரம்
உடையதும், கட்டிடத்தின் ஒவ்வொரு மூலையிலும் தங்கத்தால்
மூடிய வெங்காய வடிவ கோபுரங்களும் சூரிய ஒளியில் கண்ணாடி
போல் ஒளிவீசக்கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

[தொடர்ச்சி அடுத்த இதழில்]

★ இம்மாத வேத அறிவுபோட்டி

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும் கடை ஐந்திற்கு வேதத்திலிருந்து விடைமட்டும் எழுதி இம் மாதம் 25-ந் தேதிக்குள் அனுப்பி வைக்கவும்.

1. ஆறு வருஷம் கர்த்தருடைய ஆலயத்திலே ஒளித்து வைக்கப்பட்டிருந்த யூத இராஜா யார்?

2. எந்த பாளையத்தில் லட்சத் தெண்பத்தையாயிரம் பேரை தேவதூதன் சங்கரித்தான்?

3. பொல்லாங்கானவைகளெல்லாம் எதிலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்?

4. சத்தியமாவது என்ன என்றவன் யார்?

5. விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு என்று யார் யாருக்கு எழுதுவது?

6. இஸ்ரவேலர் கானானை எத்தனை நாள் சுற்றிப் பார்த்தார்கள்?

7. இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும் கெட்டுப் போகிறவர்களுக்குள்ளேயும் எப்படியிருக்கிறோம் என்று பவுல் கூறினார்.

8. அவனவன் தன்தன் சரீரபாண்டத்தை எப்படி ஆண்டுகொள்ளும்படி அறிந்துகொள்ள வேண்டும்?

9. எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் எப்படிப்பட்ட பிள்ளைகளாயிருப் பீர்ககள்?

10. உறைந்த மழை பெய்த நாளில் ஒரு கெபிக்குள்ளே இறங்கிப்போய் ஒரு சிங்கத்தைக் கொன்றவன் யார்?

PRINTED MATTER

If undelivered Please return to:

**THE EDITOR**

WORD OF CHRIST
Post Office Box No.5.

Batlagundu 624 202
S. India
(04543) 23278

**TO**

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கிறோம்
ஞாயிறு காலை 9-00
வியாழன் மாலை 6-45
கிறிஸ்துவின் சபை
2-2- 102 D/5 ராஜன்நகர்
சப்ரிஜிஸ்டர் ஆபிஸ் சந்து
வத்தலக்குண்டு 624 202

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST. Regd No. 84661-92
Registerd No. TN/DDL/19

Edited and Published by B. Arjunan M.A., A.Bs., behalf of Church of Christ 2.2.102 D/5 Rajan nagar
BTL Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTERS Main Road Batlagundu 624 202